# 29.01.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### திருமூர்த்தி அணையில் இருந்து இன்று முதல் தண்ணீர் திறப்பு: முதல்வர் ஜெயலலிதா உத்தரவு

திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி அணையில் இருந்து வெள்ளிக்கிழமை முதல் தண்ணீர் திறந்துவிட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதுகுறித்து வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு: திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி அணையில் இருந்து திருப்பூர், கோவை மாவட்டத்தில் உள்ள பரம்பிக்குளம் பிரதான கால்வாய், உடுமலைப்பேட்டை கால்வாய், உயர்மட்டக் கால்வாய் வாயிலாக முதலாம் மண்டல பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிட விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இந்தக் கோரிக்கைகளை ஏற்று, பாசனத்துக்காக வெள்ளிக்கிழமை முதல் தண்ணீர் திறந்துவிட உத்தரவிட்டுள்ளேன். இதனால், திருப்பூர், கோவை மாவட்டங்களில் உள்ள 94 ஆயிரத்து 521 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிப் பெறும் என்று அந்த அறிவிப்பில் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

### கீழ்பவானி பாசனப் பகுதியில் புதிய ரக நெல் விளைச்சல் அமோகம்

கீழ்பவானி பாசனப் பகுதியில் புதிய ரக நெல் விளைச்சல் அமோகமாக உள்ளது.

வழக்கமாக இந்தப் பருவத்தில் ஏ.டி.டி 38, 39 பொன்னி, பவானி, கோ-43 போன்ற ரகங்களையே விவசாயிகள் சாகுபடி செய்து வந்தனர். இந்நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் சில வருடங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட புதிய நெல் ரகங்களில் அதிக மகசூல் கிடைத்து வருகிறது.

நம்பியூர் வட்டாரத்தில் சுமார் ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக புதிய ரக நெல் நடவு செய்யப்பட்டு, அறுவடை நடைபெறுகிறது. கரட்டுப்பாளையம், குருமந்தூர், கூடக்கரை, எலத்தூர், கடத்தூர், சுண்டக்காம்பாளையம் கிராமங்களில் நடைபெற்று வரும் அறுவடை பணியை பார்வையிட்ட நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி கூறியதாவது:

நம்பியூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நெல் ரகங்கள் பிரபலமாகி வருகின்றன. இதில், ஏ.டி.டி 49 எனும் ரகம் 2011-ஆ ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இது. கோ-43 மற்றும் ஏ.டி.டி-38 ஆகியவற்றைப் பெற்றோராகக் கொண்டதாகும். இதன் வயது 135 நாட்களாகும்.

மேலும், கோ-51 என்ற ரகம் 110 நாள் வயதுடைய குறுகிய கால ரகமாகும். இது 2013-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. தற்போது நம்பியூர் வட்டாரத்தில் விவசாயிகளிடம் கோ-50 ரகம் விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. இந்தப் பயிர் தற்போது அறுவடைக்குத் தயாராக உள்ளது. இது நான்கரை அடி வரை வளர்ந்து, நல்ல மகசூல் கொடுக்க கூடியதாகும். ஏக்கருக்கு கடந்த ஆண்டு 15 பொதி வரை (4 டன்கள்) மகசூல் கிடைத்தது. இந்த ஆண்டும் ஏக்கருக்கு 4 டன்கள் வரை மகசூலை எதிர்பார்க்கிறோம் என்றார்.

முன்னதாக ஊஞ்சப்பாளையம், காராப்பாடி, கூடக்கரை பகுதிகளில் பழனிசாமி, முருகேசன் ஆகிய விவசாயிகளின் வயல்களில் அமைக்கப்பட்டிருந்த நெல் விதைப் பண்ணைகளை ஆய்வு செய்து, விதை உற்பத்தி குறித்த அறிவுரைகளை களப்பணியாளர்களுக்கு அவர் வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, உதவி விதை அலுவலர் ராமகிஷ்ணன், உதவி வேளாண் அலுவலர் விஜயகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

## தேயிலைத் தூள் விலை ரூ.6 உயர்வு

குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் அனைத்து தேயிலை ரகத்துக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.6 வரை விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 4-ஆவது ஏலம் குறித்த சந்தை நிலவரம் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. இதில், மொத்தம் 2 லட்சத்து 48 ஆயிரத்து 36 கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது. அதில், இலை ரகம் 1 லட்சத்து 48 ஆயிரத்து 601 கிலோவும், டஸ்ட் ரகம் 99 ஆயிரத்து 485 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு அதிகரித்து இருந்தால் அனைத்து ரகங்களுக்கும் கிலோவுக்கு ரூ.6 வரை விலை அதிகரித்துள்ளது. மேலும், நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அனைத்து தேயிலைத் தூள்களும் விற்பனையாகியுள்ளன.

இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண ரகம் கிலோவுக்கு ரூ.65 முதல் ரூ.73 வரையிலும், உயர் ரகம் ரூ. 85 முதல் ரூ. 90 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகம் ரூ.75 முதல் ரூ.80 வரையிலும், உயர் வகை ரூ.80 முதல் ரூ.85 வரை விலை கிடைத்தது. தேயிலைத் தூள் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## சொட்டுநீர் பாசனம் அமைக்க நிதி:எஸ்.சி.- எஸ்.டி. விவசாயிகளுக்கு அழைப்பு

தோட்டக்கலைத் துறையின் நிதியுதவியுடன் சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர் பாசன அமைப்புகளை ஏற்படுத்த எஸ்.சி., எஸ்.டி., விவசாயிகளுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறை சார்பில் வெளியிடப்பட்ட செய்தி: தோட்டக்கலைத் துறையின் மூலம் தருமபுரி மாவட்டத்தின் 8 வட்டாரங்களிலும் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகள் சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர் பாசன அமைப்புகளை ஏற்படுத்த, கடந்த 3 ஆண்டுகளுக்கும் சேர்த்து ரூ.4.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இத்திட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தங்களது வயல்களில் சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர்ப் பாசன அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

விண்ணப்பத்துடன், சிட்டா, அடங்கல், எப்.எம்.பி. வரைபடம், சிறு மற்றும் குறு விவசாயி சான்று, ஜாதிச் சான்று, குடும்ப அட்டை நகல், பயனாளியின் வண்ணப் புகைப்படம்-3 ஆகியவற்றை இணைத்து, அந்தந்த வட்டாரங்களில் உள்ள தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநரைத் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்னையில் சிவப்பு கூண் வண்டுகளை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறி விநியோகம்

பொன்னமராவதி வட்டாரத்தில் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தென்னையை தாக்கும் சிவப்பு கூண்வண்டுகளை கட்டுப்படுத்தி மகசூலை பெருக்க மானிய விலையில் வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விநியோகிக்கப்படும் இனக்கவர்ச்சி பொறியை பயன்படுத்துமாறு வேளாண்மை உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தென்னை மரங்களைத் தாக்கும் பூச்சிகளில் சிவப்பு கூண்வண்டு மற்றும் காண்டாமிருகவண்டு ஆகியவை தென்னை மரங்களின் மகசூலில் கணிசமான இழப்பை ஏற்படுத்தி வருகின்றன. இதில் சிவப்பு கூண்வண்டால் தாக்கப்பட்ட தென்னை மரங்களில் தண்டு மற்றும் அடிப்பாகத்தில் துளைகள் காணப்படும். துளைகள் மூலம் வண்டுகள் தின்று வெளியேற்றிய நார்க்கழிவுகள் காணப்படும். துளைகளிருந்து செம்பழுப்புநிற திரவம் வடிந்து கொண்டிருக்கும். பாதிக்கப்பட்ட மரத்தை தட்டினால் பொத்,பொத் என்ற ஓசை கேட்கும். மேற்கண்ட அறிகுறிகள் காணப்பட்டால், தென்னை மரங்களை சிவப்பு கூண்வண்டுகள் தாக்கியுள்ளதாக அறிந்து, அவற்றை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை பின்பற்றவேண்டும்.

முதலாவதாக தென்னந்தோப்புகளை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். மரங்களின் நுனிப்பகுதியை தேவையான இடைவெளியில்

தூய்மைப்படுத்த வேண்டும். பச்சை மட்டைகள் வெட்டுவதை தவிர்க்க வேண்டும். இதைத்தவிர பெர்ரோ லூர் எனப்படும் இனக்கவர்ச்சி பொறிகளை ஓர் ஏக்கருக்கு இரண்டு வீதம் தென்னந்தோப்புகளில் வைத்து சிவப்பு கூண்வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம். விவசாயிகளுக்கு தேவையான இனக்கவர்ச்சி பொறிகள் வேளாண்மைத் துறை மூலம் 50% மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே, பொன்னமராவதி வட்டார விவசாயிகள் இதை பயன்படுத்தி பயனடைய வேண்டும்.

## ரப்பர் மரங்களில் இலை உதிர்வு: பால்வடிப்பு நிறுத்தப்படுகிறது

குமரி மாவட்டத்தில் ரப்பர் மரங்களில் இலையுதிர்வு ஏற்பட்டு வரும் நிலையில், ரப்பர் பால்வடிப்பு நிறுத்தப்பட்டு வருகிறது.

ரப்பர் மரங்களில் ஜனவரி மாத தொடக்கம் முதல் இலைகள் உதிர்ந்து, பின்னர் பிப்ரவரியில் புதிய இலைகள் துளிர்க்கும். இலைகள் முழுமையாக உதிரும்போது ரப்பர் மரங்களில் பால் குறைந்துவிடும். இதனால் பால்வடிப்பு நிறுத்தப்படுகிறது.

தற்போது மாவட்டத்தில் ரப்பர் மரங்கள் இலைகளை வேகமாக இழந்து வரும் நிலையில், பால்வடிப்பு படிப்படியாக நிறுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, ரப்பர் ஷீட்டுக்கு விலை மிகவும் குறைவாக கிடைக்கும் நிலையில், சிறு ரப்பர் தோட்ட விவசாயிகள் முன்கூட்டியே பால்வடிப்பை நிறுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து குமரி மாவட்ட தோட்டம் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலர் எம். வல்சகுமார் கூறியதாவது:

பொதுவாக பிப்ரவரி முதல் வாரம் முதல் ரப்பர் விவசாயிகள் பால்வடிப்பை நிறுத்துவது வழக்கம். நிகழாண்டு ரப்பருக்கு விலை குறைவாக கிடைப்பதால் சிறு விவசாயிகள் முன்கூட்டியே பால்வடிப்பை நிறுத்தி வருகின்றனர். பெரும் தனியார் தோட்டங்களில் பிப்ரவரி 15ஆம் தேதிக்கும் பின்னரும், அரசு ரப்பர் கழகத்தில் பிப்ரவரி இறுதியிலும் பால்வடிப்பு நிறுத்தப்படுகிறது.

இதன்பின்னர் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் மரங்களில் புதிய இலைகள் துளிர்த்த பின்னர் பால்வடிப்பு மீண்டும் தொடங்கும்.

பால்வடிப்பு நிறுத்தப்படும் காலங்களில் வேலை இழக்கும் சிறு தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்றார் அவர்.

## கரும்புத் தோகையைப் பொடியாக்கும் இயந்திரம் வாங்க அரசு மானியம்

கரும்புத் தோகையைப் பொடியாக்கும் இயந்திரம் வாங்க சுய உதவிக் குழுக்களுக்கு மானியம் வழங்கப்படும் என வேளாண்துறை இணை இயக்குநர் ஹரிதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மாவட்டத்தில் நல்லூர், மங்களூர் வட்டாரங்களில் கரும்பு சாகுபடி பரப்பு அதிகளவில் உள்ளது. கரும்புத் தோகையை தீ வைத்து எரிப்பதால், மண்ணில் வெப்பநிலை அதிகரித்து நன்மை செய்யும் நுண்ணுயிரிகள் அழிவதோடு சுற்றுச்சூழலும் மாசடைகிறது. மேலும், மதிப்பு மிக்க இயற்கை எரு கிடைக்காமல் போகின்றது. இதனைத் தவிர்க்க கரும்புப் தோகையைப் பொடியாக்கி மக்க வைத்து எருவாக்கிப் பயன்படுத்தலாம்.

இதற்காக, மாவட்டத்தில் மாநில திட்டக் குழுவின் மூலம் செயல்படுத்தப்படும் சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ், பின்தங்கிய வட்டாரங்களான நல்லூர் மற்றும் மங்களூரில் நடப்பு 2015-16ஆம் ஆண்டில் கரும்புத் தோகையைப் பொடியாக்கும் இயந்திரம் மானிய விலையில் (அதிகபட்சம் ரூ.80,000 வரை) சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட உள்ளது.

எனவே, இப்பகுதியைச் சேர்ந்த கரும்பு விவசாயிகள், மேற்குறிப்பிட்ட இயந்திரத்தை மானிய விலையில் பெற வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை அணுகி, குழு அமைத்துப் பயன்பெறலாம் என அதில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பிப்.2-இல் உலக தண்ணீர் தின விழா

தண்ணீரின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புதுச்சேரியில் வரும் பிப்ரவரி 2ஆம் தேதி உலக தண்ணீர் தின விழா நடக்கிறது.

பாண்டிகேன் புரோபிர் பேனர்ஜி, ஹோப் நிறுவனம் ஜோசப் விக்டர் ராஜ், புதுச்சேரி அறிவியல் இயக்கம் தட்சிணாமூர்த்தி, அலையன்ஸ் பிரான்சே ஒளிவியர் ஆகியோர் கூட்டாக வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது: உலகளாவிய அளவில் தண்ணீர் பிரச்னை உள்ளது.

தண்ணீர் மாசுபடுவதற்கு மனிதனின் பலதரப்பட்ட செயல்பாடுகள் காரணமாக உள்ளது. நகரங்களினால் உண்டாகும் மாசுக்கள், தொழிற்சாலை கழிவுகள், விவசாய நிலங்கள் வேறு பயன்பாட்டிற்கு மாறுவதால், நிலத்தடி நீர்மட்டம் குறைதல், கடல்நீர் உள்புகுவதால், நிலத்தடிநீர் உப்பு நீராக மாறுதல், வியாபார நோக்கில் நிலத்தடிநீர் உறுஞ்சப்படுதல், காலநிலை மாறுபாடுதல் ஆகியவை சில காரணங்களாகும்.

இவற்றை கட்டுப்படுத்தி விலைமதிப்பற்ற தண்ணீரை பாதுகாக்க வேண்டும் என்பன குறித்து வரும் பிப்ரவரி 2ஆம் தேதி உலக தண்ணீர் விழா நடைபெற உள்ளது. ஆரோவில்லில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் கருத்துக் கேட்புக் கூட்டம் குழு விவாதம், பொருள்காட்சி நடைபெறுகிறது. தொடர்ந்து 7 வாரங்கள் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பிப்ரவரி 3 முதல் 8 வரை பாகூரிலும், பிப்ரவரி 9 முதல் 15 வரை கடலூரிலும், பிப்ரவரி 16 முதல் 22 வரை புதுவையிலும், 23 முதல் 29 வரை ஆரோவில்லிலும், மார்ச் 1ஆம் தேதி முதல் 7ஆம் தேதி வரை வில்லியனூரிலும், 15 முதல் 21 வரை மரக்காணத்திலும் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியின்போது தண்ணார்வளர்கள் மூலம் உள்ளூர் குளம், ஏரி மற்றும் வாய்க்கால்கள் தூய்மைப்படுத்தப்பட உள்ளன எனத் தெரிவித்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாய புரட்சி: நம்மாழ்வார் கனவு செல்வமுரளியால் நிறைவு




நாம் பார்க்கும் விவசாயிகளே, இந்த மண்ணின் கடைசி தலைமுறை விவசாயிகளாக இருப்பர். காரணம், மாறிவரும் தொழில் நுட்பங்கள், ஏறிவரும் மூலப்பொருட்களின் விலை, அண்டை மாநிலங்களின் ஆற்று அரசியல், உலக சந்தையின் உர அரசியல், தாதாக்களின் விளை(லை) நில அரசியல் உள்ளிட்ட பூதங்களிடம் இருந்து விடுபடும் சூத்திரத்தை கற்காதவர்கள் அவர்கள்.

ஏழை, பாழைகள் மட்டும் தான், எதையும் அளவோடு பயன்படுத்துகின்றனர் போலும். அடுத்த தலைமுறைக்கு நல்ல தண்ணீரோ, நல்ல சோறோ கிடைக்காது. காரணம், அவற்றை கடவுளைப்போல பாதுகாத்து வரும் விவசாயி என்னும் தன்னலமற்ற பிறவி, இந்த தலைமுறையோடு ஒழிக்கப்பட்டு விடும்.

'உழன்றும் ஏர்பின்னது உலகம்' என்ற வாக்கு பொய்க்காமல் இருக்க, படித்த இளைஞர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு, செல்வ முரளி உருவாக்கி இருக்கும், குறுஞ்செயலிகள் ஒரு உதாரணம்.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி கிராமத்தில், 'விஷுவல் மீடியா டெக்னாலஜீஸ்' என்னும் தொழில்நுட்ப நிறுவனத்தை நடத்தி வருகிறார், செல்வமுரளி.

தற்காலத்தில், இணையம், செயலிகளின் துணையோடு, ஆண்ட்ராய்டு அலைபேசிகள், கணினிகளை பின்னுக்கு தள்ளி, தகவல்களில் முன்னேறுகின்றன.

"விவசாயி, நவீன வேளாண் கருவிகளையோ, சந்தை வாய்ப்புகளையோ, தொழில் நுட்பங்களையோ பயன்படுத்திக்கொள்ளவும், சந்தேகங்களை போக்கிக்கொள்ளவும் இயலாததற்கு, மொழி தான் முக்கிய காரணம்" என, இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் வருத்தப்பட்டிருக்கிறார்.

நம்மாழ்வாரின் வேண்டுகோளுக்கிணங்கி, செயலிகளை, தமிழில் தரும் முயற்சியில் வெற்றி பெற்று வருகிறார், செல்வமுரளி.

அவர் உருவாக்கி இருக்கும், விவசாயம் இன் தமிழ் உள்ளிட்ட செயலிகள், விவசாயிகள், இல்லத்தரசிகள், மாணவர்களுக்கு பெரிதும் துணைபுரிகின்றன. செயலிகள் ஒரு பார்வை

விவசாயம்: தற்கால விவசாய செய்தி கள், பயிர் பாதுகாப்பு, தானியங்கள், பயிரிடும் முறை, இயற்கை விவசாயம், காய்கறி வகைகள், சிறுதானிய சமையல், நோய்களும் தீர்வுகளும், இயற்கை உரங்கள், மாடி தோட்டம், சந்தை - வாங்க, விற்க உள்ளிட்ட தனித்தனி தலைப்புகளில் செய்திகள் உள்ளன. பிரபல பத்திரிகைகளில் வெளிவந்த, வேளாண், கால்நடை அதிகாரி கள் தெரிவித்த கருத்துக்கள் இடம்பெற்றிருக்கின்றன. மொபைலில் விளக்கம் கேட்கும் விவசாயிகளுக்கு, உரிய துறை அதிகாரி களின் தொடர்பு எண்களை கொடுத்து விடுகிறார் செல்வமுரளி.

விவசாயிகளுக்குள் பேசும் வகையில் வீடியோ கான்பரன்சிங் வசதியும், ஆர்வமுள்ள வல்லுனர்கள், தங்களின் அனுபவ அறிவை எழுதி பகிர்ந்துகொள்ளும் வசதியும் இதில் உருவாக்கப்பட்டுள்ளது.

விவசாய கணக்கர்: வரவு - செலவு, அறிக்கை, நினைவூட்டல், அமைப்பு, மாதம், தேதி வழி பரிமாற்றம் உள்ளிட்ட விவரங்களை பதியும் வகையில் விவசாய கணக்கர் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. வரவு - செலவு என்னும் பகுதியில், தொகை உள்ளீடு, தேதி, நேரம், வகை, பணம் செலுத்தும் முறை முதலியவற்றை உள்ளீடு செய்யும் முறைகள் உள்ளன.

வகையில், உழவு, விதை, உரம், மருந்து, கூலி, மின்சாரம், தண்ணீர், டீசல், தரகு, நிர்வாக செலவு, வரி, போக்குவரத்து உள்ளிட்ட காரணங்களை தனித்தனியாக பதிவு செய்யும் வசதிகள் உள்ளன. பணம் செலுத்தும் முறையில், வங்கி, காசோலை, கடன் அட்டைகளின் தகவல்களை சேமிக்கும் வசதி உள்ளது. பிரிவுகளில், புதிதாக சேர்க்கவும், திருத்தவும் வசதி உள்ளது.

மேலும், விவசாயிகளுக்கு பயன் அளிக்கும் வகையில், செயலி, மென் பொருட்களை பதித்து, குறைந்த விலை யில், மடிக்கணினி, டேப்லெட்டுகளையும் விற்பனை செய்கின்றனர்.

தமிழ் சித்த வைத்திய முறைகளை கூறும் புத்தகங்களை உள்ளடக்கியதாக, தமிழ் சித்தா செயலி உள்ளது. பத்தாம் வகுப்பு, பிளஸ் 2, டி.என்.பி.எஸ்.சி., 1, 2, 4 பிரிவுகளுக்கான, 5,000க்கும் அதிகமான, மாதிரி வினாக்களை கொண்டு, டி.என்.பி.எஸ்.சி., செயலி இயங்குகிறது.

டி.என்.பி.எஸ்.சி., இன்டலி ஜென்ட், செயலியில், இருவர் போட்டி தேர்வுகள் எழுதி, தங்கள் திறமைகளை சோதிக்கும் வசதி உள்ளது. 25க்கும் மேற்பட்ட நீதிக்கதைகளுடன், 'சுட்டிக்கதைகள்' செயலி இயங்குகிறது. மாடித்தோட்டம் குறித்த, 20க்கும் மேற்பட்ட தலைப்புகளில் மாடித்தோட்டம் செயலி இயங்குகிறது. தொடர்புக்கு: - 99430 94945- நமது நிருபர்-

## பூச்சிகளை கட்டுப்படுத்தும் பயிற்சி

வாலாஜாபாத்:'அட்மா' திட்டம் சார்பில், நெல் மற்றும் வேர்க்கடலை ஆகிய பயிர்களில், தாக்கும் நோய் பூச்சிகளை கட்டுப்படுத்தும், தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.வாலாஜாபாத் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில், நேற்று, காலை 11:00 மணி அளவில் நடந்த, நெல் மற்றும் வேர்க்கடலை ஆகிய பயிர்களில் தாக்கும் நோய்களை பூச்சி மருந்தினால், கட்டுப்படுத்தும் தொழில்நுட்ப முகாமிற்கு, வட்டார வேளாண் உதவி இயக்குனர் ஜி.லதா பானுமதி தலைமை தாங்கினார். மண் பரிசோதனை வேளாண் அலுவலர் பா.காளிஅம்மாள், 'அட்மா' தொழில்நுட்ப மேலாளர் எஸ்.கலியபெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண் உதவி அலுவலர் எஸ்.பரமன் இலை சுருட்டுப்புழு மற்றும் தண்டு துளைப்பான் ஆகிய நோய்களை கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் குறித்து, விவசாயிகளிடையே விளக்கி பேசினார். பயிற்சி முகாமில், வாலாஜாபாத் வட்டாரத்தைச் சேர்ந்த, 40 விவசாயிகள் மற்றும் வேளாண் உதவி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## மாடு விற்பனை சீசன் துவக்கம்: சந்தைக்கு வரும் மாடுகள் எண்ணிக்கை அதிகரிப்பு

ஈரோடு: சீசன் துவங்கி இருப்பதால், சந்தைக்கு வரும் மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் வியாபாரிகள், விவசாயிகள் பார்வை ஈரோடு சந்தை பக்கம் திரும்பியுள்ளது.

ஈரோடு, கருங்கல்பாளையம் மாட்டு சந்தையில் வாரந்தோறும் வியாழக்கிழமை மாட்டு சந்தை நடக்கிறது. மாவட்டம் மட்டுமின்றி நாமக்கல், திருப்பூர், சேலம், கரூர், திண்டுக்கல் மாவட்டங்களில் இருந்தும் கால்நடை வளர்ப்போர், மாடுகளை கொண்டு வருகின்றனர். பெரும்பாலும் எச்.எப், சிந்து கிராஸ், செவளை காளைகள் வருகின்றன. ஆந்திரா, கர்நாடகா, கேரளா, கோவா, திருவண்ணாமலை, சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் வியாபாரிகள் மாடுகளை வாங்கி செல்கின்றனர். இந்த வாரம், 500 பசு மாடுகள், 400க்கும்

மேற்பட்ட எருமைகள், நூற்றுக்கும் அதிகமான கன்றுகள் வந்தன. பசு, 14 ஆயிரம் ரூபாய் முதல், 30 ஆயிரம் வரையிலும், எருமை, 16 ஆயிரம் ரூபாயில் இருந்து, 34 ஆயிரம் ரூபாய் வரையிலும், வளர்ப்பு கன்று, 2,000 முதல், 5,500 ரூபாய் வரையிலும் விலை போனது.

இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது: ஜனவரி இறுதி முதல், ஜூன் மாத துவக்கம் வரை சீசன் காலமாகும். இந்த காலங்களில் அதிகளவில் மாடுகள் விற்பனைக்கு வரும். கோடை என்பதால் கால்நடை தீவனங்கள் விலை அதிகரிக்கும். பால் சுரக்கும் தன்மை குறையும் என்பதே இதற்கு காரணம். எனவே பிப்ரவரி முதல், மே இறுதி வரையிலான கால கட்டத்தில் சந்தைக்கு அதிகளவில் மாடுகள் வரும். வியாபாரிகளுக்கு இது பொன்னான தருணம். தரமான மாடுகளை, குறைந்த விலைக்கு வாங்கி செல்ல ஆர்வம் காட்டுவர். எனவே வரும் வாரங்களில் வியாபாரிகள், விவசாயிகள் வருகை பன்மடங்கு அதிகரிக்கும். இவ்வாறு கூறினர்.

## திருந்திய நெல் சாகுபடி முறை: வேளாண் அலுவலர் யோசனை

ஈரோடு: திருந்திய நெல் சாகுபடி முறையில், ஒற்றை நாற்று நடவுமுறையில் அதிக மகசூல் கிடைக்கும், என வேளாண் உதவி இயக்குனர் ஆசைதம்பி கூறினார்.

மேலும், அவர் கூறியதாவது: ஒரு ஏக்கருக்கு, 25 முதல், 30 கிலோ வரை விதை நெல்லுக்கு பதில், திருந்திய நெல் சாகுபடியில், 2 முதல், 3 கிலோ விதை போதுமானது. மேட்டுப்பாத்தி நாற்றங்கால், ஏக்கருக்கு ஒரு சென்ட் பரப்பளவு போதுமானது. நாற்றங்கால் பரப்பு குறைவாவதால், நீர் பாய்ச்சுதல், பூச்சி, நோய் கண்காணிப்பு குறையும். சென்டுக்கு, 2 கிலோ டி.ஏ.பி., உரத்தை தூள் செய்து இட வேண்டும். 30 முதல், 40 நாள் வயதுள்ள நாற்றை நடவு செய்வார்கள். இம்முறையில், 10 முதல், 15 நாள் வயதுள்ள இளம் நாற்றை, ஒரு குத்துக்கு ஒரு நாற்று என நட வேண்டும்.

22.5 செ.மீ.,க்கு, 22.5 செ.மீ., என்ற அளவில், முக்கால் அடி இடைவெளி பயிருக்கு பயிர், வரிசைக்கு வரிசை இருக்க வேண்டும். கயிற்றில், ஒவ்வொரு வரிசைக்கும் அடையாளம் செய்து, நட வேண்டும். சீரான இடைவெளியால், கோனோவிடார் களைக்கருவியை பயன்படுத்தலாம். மண்ணில் காற்றோட்டம் ஏற்பட்டு, வேர் வளர்ச்சி அதிகரிக்கும். தவிர, 10 நாள் இடைவெளியில், நாற்று இடையில் கோனாவிடார் வைத்து உருட்ட வேண்டும். இதனால், ஒரு டன் அளவுக்கு, களைகள் அமுக்கப்பட்டு, பசுந்தாள் உரமாகும். இதன் மூலம், மண்ணில் அங்கப்பொருளின் அளவு அதிகரிக்கும். சாதாரண முறையைவிட, இம்முறையில் பாதி அளவு நீரே போதுமானது. ஈரப்பதம் மறைந்து, மண்ணில் சிறு கீரல் தோன்றும்போது, மீண்டும் நீர் பாய்ச்ச வேண்டும். இதனால், 30 முதல், 120 தூர்கள் வரை வளரும். பூச்சி, நோய் தாக்குதல் குறையும். இம்முறையில், ஒரு ஏக்கரில் சாதாரணமாக, 4,000 கிலோ மகசூல் பெறலாம். அதிகமாக வைக்கோலும் கிடைக்கும். சாதாரண முறையைவிட, 7 முதல், 10 நாட்களுக்கு முன் அறுவடை செய்யலாம். இம்முறையில், ஏக்கருக்கு, 15,000 ரூபாய் நிகர லாபம் கிடைக்கும், என அவர் தெரிவித்தார்.

**தடுப்பணை உயரத்தை அதிகரிக்க சோதனை முயற்சி**



ஈரோடு: சூரம்பட்டி தடுப்பணையின் உயரத்தை அதிகரிக்க, சோதனை முயற்சியில் விவசாய சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

கதிரம்பட்டி, பெருந்துறை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பெய்யும் மழை நீர், சூரம்பட்டி தடுப்பணையில் சங்கமிக்கிறது. அங்கிருந்து பெரும்பள்ளம் ஓடை வழியாக காவிரி ஆற்றில் கலக்கிறது. மற்றொரு பிரிவாக நன்செய் ஊத்துக்குளி ஓடையில், 11.8 கி.மீ தூரம் பயணித்து, 2,500 ஏக்கர் நிலத்தை பாசன வசதி பெற செய்கிறது. மழை காலத்தில் தடுப்பணையில் போதிய அளவு நீரை தேக்கி வைக்க முடிவில்லை என்ற குற்றச்சாட்டு நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. உயரம் இல்லாததே இதற்கு காரணமானது. இந்நிலையில் தடுப்பணையின் உயரத்தை அதிகரிக்க விவசாயிகள், சோதனை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து விவசாய சங்க பிரதிநிதிகள் கூறியதாவது: தடுப்பணை கட்டி பல ஆண்டுகள் ஆகிறது. அதிகளவில் சேறு தங்கி உள்ளது. அதை தூர் வார வேண்டும். மேலும் அணையை ஒட்டியுள்ள ஆக்கிரமிப்புகளை முற்றிலுமாக அகற்றி உயரத்தை அதிகரிக்க வேண்டும். ஷட்டர்களிலும் தொழில் நுட்ப ரீதியாக தவறுகள் உள்ளன. அணை, ஓடையை தூர் வாரினால் மட்டும் போதாது. நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும். அப்போது கிடைக்கும் அழுத்தத்தில் ந. ஊத்துக்குளி ஓடைக்கு எளிதாக நீர் செல்லும். இதற்காகவே பொதுப்பணித்துறையிடம் ஒப்புதல் பெற்று தடுப்பணை முழுவதும் மண் மூட்டையை கொண்டு அடுக்கி வைத்துள்ளோம். சோதனை முறையிலான நடவடிக்கை இது. எவ்வளவு நீரை சேமிக்க முடியும். சேமிக்கும் போது எப்பகுதி வழியே நீர் வெளியேறுகிறது என்பது குறித்து ஆய்வு செய்யவே மண் மூட்டை வைக்கப்பட்டுள்ளது. இதை அடிப்படையாக கொண்டு பொதுப்பணித்துறை, இன்ஜினியர்கள் உள்ளிட்டோரிடம் ஆலோசனை செய்து தடுப்பணையின் உயரத்தை அதிகரிப்பது குறித்து மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை வைக்கப்படும். அதன் அடிப்படையில் தடுப்பணை உயரத்தை அதிகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். தடுப்பணையை உயர்த்துவது மட்டுமின்றி ஷட்டர்களை

சரி செய்வது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு கூறினர்.

## தேசிய மீன் வளக்கணக்கெடுப்பு 3 ஆயிரம் பேர் ஈடுபடுகின்றனர்

தூத்துக்குடி: இந்தியா முழுவதும் தேசிய மீன் வளக் கணக்கெடுக்கும் பணியில் பிப்., 1 லிருந்து மார்ச் 1 வரை, 3 ஆயிரம் பணியாளர்கள் ஈடுபடுகின்றனர்.

மீன் வளக்கணக்கெடுப்பு: ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தியாவில் தேசிய மீன் வளக் கணக்கெடுக்கும் பணிகள் நடந்து வருகிறது. இதற்கு முன் 2010 ல், கணக்கெடுக்கும் பணிகள் நடந்தது. 2016 ல் வரும் பிப்.1 முதல் மார்ச் 1 ம் தேதி வரை பணிகள் நடக்கவுள்ளது. இந்திய கால்நடைத்துறை மற்றும் பால் வள அமைச்சகம் சார்பில் கணக்கெடுக்கும் பணிக்கு 3.8 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த பணியினை மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி மையம் சார்பில் எடுக்கப்படவுள்ளது. இதற்கான கணக்கெடுப்பாளர்கள் மீனவ குடியிருப்புகளில் வசிக்கும் படித்தவர்கள் 3 ஆயிரம் பேர் ஈடுபடவுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

11 லட்சம் குடும்பங்கள்: இந்தியாவில் கிழக்கு மேற்கு கடற்கரை பகுதியில் 73 கடலோர மாவட்டங்களில்,4,250 மீனவ கிராமங்களில் 11 லட்சம் மீனவ குடும்பங்களை நேரில் சந்தித்து கணக்கெடுப்பு நடத்தவுள்ளனர். மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி நிலையத்தின் 26 மையங்களில் 220 அலுவலர்கள் கண்காணிக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். இதில் குஜராத் முதல் மேற்கு வங்கம் வரை உள்ள 5,500 கி.மீ., நீள கடற்கரை, அந்தமான், நிக்கோபார், லட்சத்தீவு பகுதியில் 1,500 கி.மீ., பகுதியில் இந்திய மீன் வள அளவை நிறுவனத்தின் மேற்பார்வையில் நடத்தப்படுகிறது.

தகவல்கள்: மீனவ குடும்பங்களின் விபரங்கள்,மீன் பிடி முறை, பதப்படுத்துதல்,மீன்களை கையாளுதல், விற்பனை வசதிகள், கிராமங்களின் நிலை, உள்கட்டமைப்பு,மீன் பதப்படுத்தும் கூடங்கள்,

படகுகள், வலைகள், மீனவர்களின் கல்வி நிலை குறித்து சமூக, பொருளாதார அமைப்புகள் குறித்த விபரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி மைய தலைமை விஞ்ஞானி பி.பி.மனோஜ்குமார் தெரிவித்தாவது: தேசிய மீன் வள கணக்ெடுப்பு பணி பிப்.,1 ம் தேதி முதல் துவங்குகிறது. 2010 கணக்கெடுப்பின் படி தமிழகத்தில் 1 லட்சத்து 92 ஆயிரத்து 697 மீனவ குடும்பங்கள் 13 கடலோர மாவட்டங்களில் உள்ள 573 கிராமங்களில் வசித்து வருகின்றனர்.8 லட்சத்து 2 ஆயிரத்து 972 மீனவர்கள் உள்ளனர். தூத்துக்குடி கடல் மீன் வள ஆராய்ச்சி மையம் சார்பில் தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் கணக்கெடுக்கும் பணிகள் நடக்கவுள்ளது. இதில் தூத்துக்குடியில் 32 கிராமங்களில், 19,998,குடும்பங்களில், 82,565 மீனவர்கள் உள்ளனர்.திருநெல்வேலியில் 9 கிராமங்களில் 6,132 குடும்பங்களில்,24,639 மீனவர்கள் உள்ளனர். கன்னியாகுமரியில் 46 கிராமங்களில் 40,263 குடும்பங்களில் ஒரு லட்சத்து 56 ஆயிரத்து 595 மீனவர்கள் உள்ளனர். தமிழகத்தில் 46,070 படகுகள் உள்ளன. இதில் இழுவை விசைப்படகுகள் 5,767 உட்பட 10,692 விசைப்படகுகள் உள்ளன. மோட்டார் இயந்திரம்

பொருத்தப்பட்ட 24,948 படகுகள், 10, 436 நாட்டுப்படகுகள் உள்ளன. இந்த கணக்கெடுப்பின் அடிப்படையில் தான் மத்திய அரசு மீன்வளக்கொள்கைகள், மீனவர்களுக்கான வளர்ச்சி திட்டங்கள் குறித்து திட்டமிடப்படவுள்ளது, என, அவர் தெரிவித்தார். உடன் விஞ்ஞானிகள் ஜெகதீஸ், சிவதாஸ் ஆகியோர் இருந்தனர்.

## அலங்காரச் செடி உற்பத்திக்கு விண்பதிய தொழில்நுட்பம்

காந்திகிராமம்; வீட்டில் அழகுக்காக வளர்க்கப்படும் அலங்கார செடிகளின் உற்பத்தியை அதிகரிக்க, காந்திகிராம வேளாண் அறிவியல் மையம் விண் பதிய தொழில்நுட்ப முறையை விவசாயிகளுக்கு பரிந்துரைத்துள்ளது. வீடுகள், தோட்டங்களில் பலர் மலர்ச் செடிகளைப் போல, அலங்காரத்திற்கான அழகுச்செடிகளையும் வளர்க்கின்றனர். இந்த

செடிகள் மேலும் தேவைப்படும்போது, மீண்டும் உற்பத்தி செய்யவோ அல்லது நர்சரிகளில் வாங்கி மீண்டும் நட்டு பராமரிக்கவோ வேண்டியுள்ளது.

இருப்பினும் தாய்ச்செடிபோல் புதிய செடிகள் இருப்பது இல்லை. அப்படியே வளர்ந்தாலும் சீரான வளர்ச்சி பெற, சில ஆண்டுகள் தேவைப்படுகிறது. இப்பிரச்னையை தவிர்க்க காந்தி கிராம வேளாண் அறிவியல் மையம் புதிய "விண் பதிய தொழிட்நுட்பத்தை' பரிட்சார்த்தமாக 18 கிராமங்களில் அறிமுகப்படுத்தியது. இதற்கு தற்போது நல்ல பலன் கிடைத்துள்ளதால் இதனை விவசாயிகளுக்கு பரிந்துரைக்க முடிவு செய்துள்ளது.

பல்கலையின் தொழில்நுட்ப வல்லுநர் ஷாஹின்தாஜ் கூறியதாவது: பெரும்பாலும் குரோட்டன்ஸ், இட்லிப்பூ, செம்பருத்தி உள்ளிட்ட பல்வேறு அழகுச் செடிகளை மக்கள் விரும்பி வீட்டில் வளர்க்கின்றனர். செடியின் கிளையில் "பென்சில்' அளவுள்ள தண்டில் ஒன்றரை அங்குலத்திற்கு தோல் பகுதியை சுற்றிலும் நீக்கி விட வேண்டும்.

அதில், நீரில் நனைத்த தென்னை மஞ்சை வைத்து (நெட்டில் உள்ள தும்பு போன்ற பொருள்) சுற்றி பாலிதீன் பேப்பரால் நுனி மற்றும் அடிப்பகுதியில் கட்டிவிடவேண்டும். தினமும் செடிக்கு நீருற்ற வேண்டும். 45வது நாளில் தென்னை மஞ்சு கட்டப்பட்ட இடத்தில் வேர் முளைத்திருப்பது தெரியும்.

பின் கிளையின் அடிப்பகுதியில் "வி' வடிவத்தில் கிளையின் நடுப்பகுதியை அறுத்து எடுத்துவிட வேண்டும். சிறிது நாளில் வேருடன் கூடிய மற்றொரு நாற்று நமக்கு கிடைக்கும். தாய்ச் செடியின் தாவரவியல் பண்புகளும், நிறம் உள்ளிட்டவையும் அந்த நாற்றில் 100 சதவீதம் இருக்கும். இந்த தொழில்நுட்பத்தில் ஒரே முறையில் ஒரு செடியில் இருந்து 100 புதிய நாற்றுக்களை உருவாக்கலாம். இதனை தற்போது கொய்யா, மாதுளை, பூ விவசாயிகளுக்கு பரிந்துரைத்து உள்ளோம், என்றார். விபரங்களுக்கு 95007 - 82764 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## கொடிக்காய்ப்புளி கிலோ ரூ.160

போடி;மருத்துவகுணம் வாய்ந்த "கொடிக்காய்ப்புளி' அரிதாகி வரும் நிலையில், தற்போது சீசன் துவங்கியுள்ளதால் கிலோ ரூ.160 க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கொடிக்காய்ப்புளி மரத்திலே பழுத்து காய்த்திருக்கும் நிலையில் மழை, காற்று அதிகம் அடித்தாலும், கீழே விழாமல் தொங்கி கொண்டிருக்கும். இதனால் இந்த மரத்தினை "உதிரா மரம்' என அழைப்பர். மார்ச்,ஏப்ரல், மே, ஜூன் மாதம் இதன் சீசனாகும். சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக விளைச்சல் முன்கூட்டியே துவங்கிவிட்டது. கொடிக்காய்புளி வறட்சியை தாங்கி நிற்பதோடு, மரம் வளர்ந்து இருக்கும். இதன் மரம், பூக்கள், காய்கள் அனைத்தும் உடல் ஆரோக்கியத்திற்கு பயன் உள்ளது. மொத்த வியாபாரிகளிடம் சில்லரை வியாபாரிகள் கிலோ 100 க்கு கொள்முதல் செய்து ரூ. 160 க்கு விற்பனை செய்கின்றனர். விவசாயி கே.முருகன் கூறுகையில்,""வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் கொடிக்காய்ப்புளி சீசன் துவங்கி விடும். சில மாதங்களுக்கு முன் பெய்த மழையின் காரணமாக சீசன் முன்கூட்டியே துவங்கிவிட்டது. மருத்துவகுணம் கொண்ட இதனை பலர் வாங்கி விரும்பி உண்கின்றனர்," என்றார்.

## மேட்டூர் அணையில் 6,000 கனஅடி நீர்திறப்பு: நடப்பாண்டு குறுவை சாகுபடி பாதிக்க வாய்ப்பு

மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து, பிப்.,25 வரை, வினாடிக்கு, 6,000 கனஅடி நீர்திறப்பதால், நீர் இருப்பு, 13 டி.எம்.சி., குறையும். இதனால், நடப்பாண்டு டெல்டா குறுவை சாகுபடி பாதிக்கும் அபாயம் உள்ளது.

ஆண்டுதோறும் ஜூன், 12ல் டெல்டாவில், 4 லட்சம் ஏக்கர் குறுவை சாகுபடிக்கு நீர்திறக்க, மேட்டூர் அணையில் குறைந்தபட்சம், 52 டி.எம்.சி., நீர் இருக்க வேண்டும். கடந்த ஆண்டு நீர் இருப்பு குறைவாக இருந்ததால், தாமதமாக, ஆக.,9ம் தேதி பாசனத்துக்கு நீர்திறக்கப்பட்டது. தாமதமாக நீர்திறந்ததால் கடந்த ஆண்டு டெல்டாவில், 2 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி பாதித்தது. டெல்டா சாகுபடி முடிந்ததால், மேட்டூர்

அணையிலிருந்து ஜன.,28ல் தண்ணீர் நிறுத்த வேண்டும். கடந்த, 2004 மகாமக விழாவுக்காக மேட்டூர் அணையில் இருந்து ஒரு வாரம் மட்டுமே நீர்திறக்கப்பட்டது. நடப்பாண்டு மகாமக விழாவுக்காக மேட்டூர் அணையில் இருந்து, ஜன.,29 முதல், பிப்.,25 வரை, வினாடிக்கு, 6,000 கனஅடி நீர்திறக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். தற்போது அணை நீர்மட்டம், 71.20 அடியாகவும், நீர்இருப்பு, 33.5 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. நாள் ஒன்றுக்கு, அரை டி.எம்.சி.,(6,000 கனஅடி) வீதம், 28 நாள், 13 டி.எம்.சி., நீர்திறந்தால், பிப்.,25ல் அணை நீர்மட்டம், 50 அடியாகவும், நீர்இருப்பு, 20 டி.எம்.சி.,யாகவும் சரியும். இருப்பு நீரின் மூலம் கோடைகால குடிநீர் தேவையை சமாளிக்க முடிந்தாலும், டெல்டா குறுவை சாகுபடிக்கு நீர்திறக்க மேலும், 32 டி.எம்.சி., நீர்தேவைப்படும். இதனால், நடப்பாண்டு சாகுபடிக்கு தாமதமாகவே நீர்திறக்க முடியும் என்பதால், டெல்டாவில், 50 முதல், 100 சதவீதம் குறுவை சாகுபடி பாதிக்க வாய்ப்புள்ளது. ஆண்டுதோறும், 45 ஆயிரம் ஏக்கர் சம்பா பாசனத்துக்காக மேட்டூர் கால்வாயில் அதிகபட்சம், 9.5 டி.எம்.சி., நீர்திறக்கப்படும். அதை கணக்கிடுகையில், 13 டி.எம்.சி., நீரை, 60 ஆயிரம் ஏக்கர் சம்பா சாகுபடிக்கு முழுமையாக வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 257 பயனாளிகளுக்கு இலவச வெள்ளாடு

தொட்டியம், : திருச்சி மாவட்டம், தொட்டியம் அருகேயுள்ள தோளூர்பட்டி ஊராட்சியில் தமிழக அரசின் சார்பில் இலவச வெள்ளாடுகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவுக்கு கலெக்டர் பழனிச்சாமி தலைமை வகித்தார். திருச்சி மண்டல கால்நடை துறை இணை இயக்குநர் சங்கரசுப்பிரமணியன், தா.பேட்டை ஒன்றியக் குழுத் தலைவர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு விருந்தினராகப்

பங்கேற்ற முசிறி தொகுதி எம்.எல்.ஏ சிவபதி, பயனாளிகள் 257 பேருக்கு ரூ. 32 லட்சத்து 12 ஆயிரம் மதிப்புள்ள இலவச வெள்ளாடுகளை வழங்கினார். விழாவில் முசிறி கால்நடை உதவி இயக்குநர் செல்வராஜ், மாவட்ட கவுன்சிலர்கள் ஏழூர்பட்டி தங்கவேல், ரவிச்சந்திரன், நெடுமாறன், கால்நடை துணை இயக்குநர் முருகேசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக, ஊராட்சி தலைவர் வாண்டையார் ஆறுமுகம் வரவேற்றார். முடிவில் துணைத் தலைவர் ராசு நன்றி கூறினார். -

**ஒருங்கிணைந்த மேலாண்மை பயிற்சி**

பட்டுக்கோட்டை, : திருவோணம் வட்டாரம் பெரியகோட்டைக்காடு கிராமத்தில் வேளாண்மைத்துறை மூலம் அட்மா விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின்கீழ் 40 விவசாயிகளுக்கு நிலக்கடலை மற்றும் எள் பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை முறை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது. திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் தலைமை வகித்தார். வெங்கரை ஊராட்சி தலை வர் கோபால் முன்னிலை வகித்தார். வெங்கரை ஒன்றியக்குழு உறுப்பினர் பழனியப்பன், திப்பன்விடுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் சேகர் சிறப்புரையாற்றினர். பயிற்சியில் கார்த்திகை- மார்கழி பட்டத்துக்கு தேவையான நிலக்கடலை பயிரில் ரகத்தேர்வு, பூஞ்சாணம் விதை நேர்த்தி, உயிர் உரங்கள் நேர்த்தி, பயிர் எண்ணிக்கை பராமரித்தல், ரசாயன உரம், நீர் நீர்வாகம், பூச்சி, நோய் மேலாண்மை தொழில்நுட்பம் குறித்து பட்டுக்கோட்டை வேளாண்மை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் பாரதி பேசினார். நிலக்கடலை பயிருக்கு உர நிர்வாகம் மற்றும் நுண்ணூட்டச்சத்து, கலவை உரம் பயன்படுத்துதல், ஜிப்சம் இடுவதால் ஏற்படும் நன்மை, இயற்கை உரம் மற்றும் உயிர் உரங்கள் இடுவதின் முக்கியத்துவம், எள் பயிரில் அடியுரமாக மாங்கனீசு சல்பேட் இடுவதால் ஏற்படும் நன்மை, அடியுரமாக ஜிப்சம் இடுதல், வளர்ச்சி பருவத்தில் அதிக சேதம் விளைவிக்கும் இலை- காய் பிணைக்கும் புழுவை கட்டுப்படுத்தும் முறை, இலை சிறுத்தல் நோயால் பாதிக்கப்பட்ட செடிகளை பிடுங்கி எடுப்பதால் ஏற்படும் நன்மை குறித்து திருவோணம் வேளாண்மை உதவி இயக்குநர்

மதியரசன் பேசினார். களை நிர்வாகம் மற்றும் திரவ உயிர் உரங்கள் உபயோகம் பற்றி திருவோணம் வேளாண்மை அலுவலர் முருகேசன் எடுத்துரைத்தனர். டிரைக்கோடெர்மா விரிடி, ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா நுண்ணுயிர் உரங்கள் கொண்டு விதை நேர்த்தி செய்தல் செயல்விளக்கத்தை பகுதி வேளாண்மை உதவி அலுவலர் ரஞ்சித்செய்துகாண்பித்தார்.

## நாகையில் இன்று கறவை மாடு வளர்ப்பு பயிற்சி

நாகை, : நாகை வெளிப்பாளையம் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், மாவட்ட ஆத்மா திட்டத்தின்கீழ், இன்று (29ம் தேதி) காலை 9 மணி அளவில் கறவை மாடு வளர்ப்பு குறித்த இலவச ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளது. கறவை மாடு வளர்ப்பின் இன்றைய நிலை, தரமான கறவை மாடுகளை தேர்வு செய்தல், கொட்டகை அமைக்கும் முறை, கறவை மாடு வளர்ப்பிற்கான சமச்சீர் தீவன மேலாண்மை, கறவை மாடு கன்று, கிடேரி பராமரிப்பு, கறவை மாடுகளில் கருவூட்டல் மற்றும் சினைப்பருவ மேலாண்மை, கறவை மாடுகளுக்கு ஏற்படும் நோய்கள், தடுப்பு முறைகள்போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படும். முதலில் வரும் 40 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். இத்தகவலை கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

## குறைந்த செலவில் செழித்து வளரும் நெல்லி மகசூலை தருகிறது அள்ளி

சிவகங்கை, : சிவகங்கை சுற்றுப்பபகுதி கிராமங்களில் செழித்து வளரும் நெல்லியால் விவசாயிகள் குறைந்த செலவில் வருவாய் ஈட்டி வருகின்றனர். சிவகங்கை மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகள் செம்மண் சார்ந்த பகுதியாக உள்ளது. ஆண்டுதோறும் சீரான மழை பெய்யாததால் இப்பகுதியில் விவசாயம் செய்வது குறைந்து விட்டது. இந்நிலையில் குறைந்த அளவிலான பராமரிப்புச்செலவு மற்றும் சொட்டு

நீர் பாசனம் மூலம் வருவாய் ஈட்டும் விவசாயத்தை பல வெளிமாவட்ட விவசாயிகளும், நிறுவனங்களும் இப்பகுதியில் செய்து வருகின்றனர்.

இதில் நெல்லி உற்பத்தி முதலிடம் வகிக்கிறது. தற்போது பல்வேறு மருந்துகள் செய்வதற்கும், நகர்பகுதிகளில் விற்பனை செய்வதற்கும் நெல்லிக்காய் பயன்பட்டுவருகிறது. சிவகங்கை அருகே கவுரிப்பட்டி, மதகுபட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நெல்லிக்காய் விளைவிக்கப்படுகிறது. நெல்லிக்காய்களுக்கு எல்லா காலங்களிலும் கடும் கிராக்கி நிலவி வருகிறது. இதில் பவானிசாகர், கிருஷ்ணா, காஞ்சன், என்ஏ7, என்ஏ10 என பல்வேறு வகையான காய்கள் உள்ளது. 15 அடிக்கு ஒரு நெல்லிச்செடி நடப்படுகிறது. இந்த நிலங்களில் மரங்கள் வளர்ந்த பின்னரும் ஊடு பயிராக தட்டைப்பயிர், தர்பூசணி உள்ளிட்ட பல்வேறு வகையான பயிர்களை விவசாயம் செய்துகொள்ளலாம். மேலும் சொட்டுநீர் பாசனம் மூலம் நீர் பாய்ச்சசுவதால் நீருக்கான செலவும், நீர் வீணாவதும் தடுக்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளில் இருந்து காய்க்கத்தொடங்கும் நெல்லி சுமார் 60ஆண்டுகள் வரை காய்க்கும். இது குறித்து நெல்லி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர் கூறியதாவது: வருடத்திற்கு ஒரு முறை மற்றும் இரண்டு முறை காய்க்கும் மரங்கள் உள்ளன. ஒரு மரம் வருடத்திற்கு 50 கிலோ முதல் 150 கிலோ வரை காய்க்கும் திறன் கொண்டதாகும். இயற்கை உரங்கள் மட்டுமே பயன்படுத்தி வருகிறோம். நெல்லிக்கான பராமரிப்பு செலவு மிகவும் குறைவு. மேலும் நோய் தாக்குதல் போன்ற பிரச்னை இல்லை.உடனடியாக பறிக்கப்படும் காய்கள் மட்டுமல்லாது கீழே விழுந்து பலநாள்கள் ஆகி காய்ந்து போன நிலையில் உள்ள காய்களும் வீணாகாது. இங்கிருந்து கேரளா போன்ற மாநிலங்களுக்கு மருந்துகளுக்காகவே அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது என்றனர்.

**மூலிகை மந்திரம்: பீர்க்கங்காய்**



நம்முடைய உணவில் முக்கியமான அங்கம் வகிக்கும் காய்கறி வகைகளில், மிக முக்கியமான இடத்தை பீர்க்கங்காய்க்குக் கொடுக்கலாம். அந்த அளவுக்குப் பல நோய்கள் வராமல் தடுக்கும் குணம் கொண்டது என்பதுடன் வந்த நோயை விரட்டும் திறனும் கொண்டது பீர்க்கங்காய். மித வெப்பமான சீதோஷ்ண நிலையில் வளரக்கூடிய ஒரு கொடி வகைத் தாவரம் பீர்க்கங்காய் ஆகும். ஆசியா, ஆப்பிரிக்கா பகுதிகளில் பெரும்பாலும் பயிரிடப்பட்டு உணவாகப் பயன்படுத்தப்படுகிறது. உணவுக்காக மட்டுமின்றி நாருக்காகவும் பல நாடுகளில்பயிரிடப்படுகிறது.

பீர்க்கங்காயின் தாவரவியல் பெயர் Luffa acutangula என்பது ஆகும். Ribbed gourd என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. கடு கோஷ்டகி, திக்த கோஷ்டகி என்பவை இதன் வடமொழிப் பெயர்கள். இந்தி மொழியில் பீர்க்கங்காயை ஷிரேபல்லி, ஜிங்கதோரீ, தோனா என்கிற பெயர்களால்குறிப்பர்.

**பீர்க்கங்காயில் பொதிந்துள்ள மருத்துவப் பொருட்கள்**

100 கிராம் எடையுள்ள பீர்க்கங்காயில் சுண்ணாம்புச்சத்து 18 மி.கி. அளவும், மாவுச்சத்து 3 கிராம் அளவும், எரிசக்தி 17 கலோரியும், பாஸ்பரஸ் 26 மி.கி. அளவும் உள்ளது. வைட்டமின் பி2, வைட்டமின் சி, கரோட்டீன், நியாசின், இரும்புச்சத்து, அயோடின் மற்றும் ஃபுளோரின் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகப் பீர்க்கங்காய் விளங்குகிறது.

பீர்க்கங்காய் இனிப்புச் சுவையுடையது என்பது மட்டுமின்றி எளிதில் ஜீரணமாகக் கூடியதாகவும் விளங்குகிறது. உடலுக்குக் குளிர்ச்சி தரும் பீர்க்கங்காய், மிகக் குறைந்த அளவேயான கொழுப்புச் சத்தைக் கொண்டிருக்கிறது. இதனால், உடல் எடையைக் குறைக்க விரும்புவோர்க்கு நல்ல உணவாக அமைகிறது. இதில் மிகுந்த நீர்ச்சத்து இருப்பதும் எடை குறைவதற்கு முக்கிய காரணமாக அமைகிறது.

பீர்க்கங்காயின் சாறு மஞ்சள் காமாலை நோய்க்கும் அருமருந்தாக உதவுகிறது. பீர்க்கங்காயை அரைத்துப் பெறப்பட்ட சாறு அல்லது காய்ந்த பீர்க்கங்காயின் விதை மற்றும் சதைப்பகுதியின் சூரணம் மஞ்சள் காமாலை நோயை மறையச் செய்யும் இயற்கை மருந்து என்றால் மிகையில்லை.பீர்க்கங்காயில் ரத்தத்தைச் சுத்தப்படுத்தக்கூடிய வேதிப் பொருட்களும் மிகுந்துள்ளன. குறிப்பாக, மது அருந்துகிறவர்களுக்கு மதுவினால் ஏற்படும் நச்சுக்களை ரத்தத்தில் இருந்து அகற்ற பீர்க்கங்காய் உதவும். ரத்தம் சுத்தமாவதோடு கெட்டுப் போன ஈரலைச் சீர் செய்து மீண்டும் புத்துணர்வோடு செயல்படவும் பீர்க்கங்காய் கை கொடுக்கிறது.

குறைந்த அளவு எரிசக்தி கொண்ட உணவாக இருப்பதால் சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற உணவாக விளங்குகிறது. பீர்க்கங்காயில் இருக்கும் பெப்டைட்ஸ், ஆல்கலாப்ட்ஸ், சோன்டின் போன்ற வேதிப்பொருட்கள் ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவைக் குறைக்க உதவுகின்றன. பீர்க்கங்காயில் உள்ள அதிகமான நார்ச்சத்து மலச்சிக்கலைப் போக்குவதற்கு உதவுகிறது. அது மட்டுமின்றி மூல

நோய்க்கும் முக்கிய மருந்தாக பீர்க்கங்காய் விளங்குகிறது.

பீர்க்கங்காய் முற்றி காய்ந்த நிலையில் கூடு போன்ற நார்ப்பகுதியைப் பெற்றிருக்கும். இந்த நார் கொண்டு உடலைத் தேய்த்துக் குளிப்பதால் தோல் ஆரோக்கியத்தையும், பளபளப்பான தன்மையையும் பெறும். தோலின் மேலுள்ள பருக்கள் விரைவில் குணமாகவும் உதவி செய்கிறது. உடலின் துர்நாற்றத்தைப் போக்கவல்ல மருத்துவ குணத்தையும் பீர்க்கங்காயின் நார்பெற்றிருக்கிறது.

ஹோமியோபதி மருத்துவத்தில் பீர்க்கங்காயின் சாறு கல்லீரல், மண்ணீரல் ஆகியவற்றில் ஏற்படும் பல்வேறு நோய்களுக்கும் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. உணவுப்பாதையின் உட்புறப் பகுதிகளில் ஏற்படும் எரிச்சல் மற்றும் வீக்கத்தைப் போக்குவதற்கும் பீர்க்கங்காய் சாறு பயன்படுத்தப்படுகிறது. மத்திய சித்த ஆயுர்வேத ஆய்வுக்கழகம் பீர்க்கங்காயின் இலை, காய், வேர் போன்றவற்றில் இருந்து பெறப்படும் சாற்றை தினமும் 20 மி.லி. வரையில் ஒரு வேளைக்கான மருந்தாக உட்கொள்வது பலவிதங்களிலும் நல்லது என பரிந்துரை செய்திருக்கிறது. பீர்க்கங்காயை நன்கு உலர்த்திப் பொடித்து நன்கு சலித்து வைத்துக் கொண்டு மூக்குப்பொடி போல மூக்கிலிட்டு உறிஞ்சுவதால் மஞ்சள் காமாலை நோய் மறையும் எனவும் ஆயுர்வேதம் குறிப்பிடுகிறது.

**பீர்க்கங்காய் மருந்தாகும் விதம்** ஒரு கப் பீர்க்கங்காய் சாறு எடுத்து அதனோடு இனிப்புச் சுவைக்காக வெல்லம் அல்லது கருப்பட்டி சேர்த்து கலக்கி காலை, மாலை என இரண்டு வேளையும் உணவுக்கு முன் பருகி வருவதால் மஞ்சள் காமாலை நோய்மறைந்துபோகும்.

பீர்க்கங்காயின் சதைப் பகுதியை நன்றாக நசுக்கி காயங்களின் மேல் பற்றாகப் போட்டுக் கட்டி வைப்பதால் ரத்தக் கசிவு நீங்கி காயம் ஆறும்.

பீர்க்கங்காயைத் துண்டுகளாக்கி இரண்டு டம்ளர் நீர் விட்டு அடுப்பேற்றி நன்றாகக் கொதிக்க வைக்க வேண்டும். அதனோடு சுவைக்காகப்

போதிய உப்பு சேர்த்து, காலை, மாலை என இரு வேளை பருகி வருவதால் வயிற்றினுள் துன்பம் தருகிற வயிற்றுப் பூச்சிகள் வெளித்தள்ளப்பட்டு வயிறு சுத்தமாகும். பீர்க்கங்காய் சாறு எடுத்து அரைடம்ளர் சாறுடன் போதிய இனிப்பு சேர்த்து தினமும் இருவேளை குடித்து வருவதால் ஆஸ்துமா எனும் மூச்சு முட்டுதல் குணமாகும்.

பீர்க்கங்காயின் இலைகளை மைய அரைத்து அதனோடு பூண்டை நசுக்கிச் சாறு எடுத்து சேர்த்துத் பூசி வந்தால் தொழுநோய்ப் புண்கள் விரைவில் ஆறும். பீர்க்கங்காயைச் சிறுசிறு துண்டுகளாக்கி வெயிலில் நன்றாக உலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு, இடித்துப் பொடி செய்து வைத்துக்கொண்டு இரவு சாதம் வடித்த கஞ்சியை வைத்திருந்து காலையில் அதனோடு பீர்க்கங்காய் பொடியைக் கலந்து தலைமுடிக்குத் தேய்த்து 20 நிமிடங்களுக்குப் பிறகு குளித்து வருவதால் இளநரை தடை செய்யப்படுவதோடு, தலைமுடி மென்மையாகவும் பளபளப்பாகவும் விளங்கும்.

பீர்க்கங்காய்க் கொடியின் வேர்ப்பகுதியைச் சேகரித்து நன்கு உலர்த்திப் பொடித்து வைத்துக்கொண்டு தினம் இருவேளை சிறிதளவு உண்டு வர நாளடைவில் சிறுநீரகக் கற்கள் வெளியேறும்.

பீர்க்கங்கொடியின் இலைகளை எடுத்து நன்றாக நீர் விட்டு அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து சாப்பிட்டு வருவதால் சீதபேதி குணமாகும். வயிற்றுக் கடுப்பும் தணியும்.

பீர்க்கங்கொடியின் இலையைக் கசக்கிப்பிழிந்து சாறு எடுத்து நாள்பட்ட ஆறாத புண்களைக் கழுவுவதாலோ அல்லது மேற்பூச்சாகப் பூசி விடுவதாலோ விரைவில் புண்கள் ஆறி விடும்.
பீர்க்கங்காய்க் கொடியின் வேர்ப்பகுதியை நீரிலிட்டுக் கொதிக்க வைத்து மேற்பூச்சாகப் பயன்படுத்துவதால் வீக்கமும் வலியும் குறைந்து நெறிக்கட்டிகள்குணமாகும்.
பீர்க்கங்காய் சாறு எடுத்து உடன் இனிப்பு சேர்த்து வெறும் வயிற்றில் சில நாட்கள் குடித்து வருவதால் பித்தத்தால் வந்த காய்ச்சல் தணிந்து

போகும்.

பீர்க்கங்காய் சாறு அரை டம்ளர் அளவு அன்றாடம் வெறும் வயிற்றில் 48 நாட்கள் குடித்து வருவதால் அதிலுள்ள பீட்டா கரோட்டீன் சத்து கிடைக்கப்பெற்று கண் பார்வை தெளிவு பெறும். கண்களுக்கு ஆரோக்கியம் மேலோங்கும். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் பீர்க்கங்காயை உணவில் சேர்த்துக் கொள்வதால் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்திக் கொள்ள முடியும். எளிதில் கிடைக்கிற, இத்தனை நன்மைகள் நிறைந்த பீர்க்கங்காயை இனியேனும் பயன்படுத்திக் கொள்வோம்தானே?! - See more at: http://www.dinakaran.com/Medical_Detail.asp?Nid=4231&cat=500#sthash.R5ZvEiuq.dpuf

## வயிற்று புண்ணை போக்கும் பூசணி




பரங்கி பூசணி, பரங்கிக்காய், சர்க்கரை பூசணி என்று பல்வேறு பெயர்களில் இதை தமிழிலே குறிப்பிடுவார்கள். தரையில் படரும் கொடி வகையைச் சேர்ந்த இந்த காய் மேற்புறத்தில் அடர்த்தியான பச்சை நிற தோலையும், உள்புறத்தில் அதிக சதைப்பற்றையும், நிறைய விதைகளையும் கொண்டதாக விளங்குகிறது. இதன் தோல், சதைப்பகுதி, விதைகள் ஆகியவையும் மருந்தாக விளங்குகின்றன. மேலும் இதன்

இலைகளும் நல்ல ஊட்டசத்து மிக்க உணவாக பயன் தரக் கூடியதாகும்.

சீனா போன்ற நாடுகளில் பூசணிக்காயை சூப் ஆக வைத்து உணவுக்கு முன்பாக பருகும் வழக்கம் உள்ளது. இதில் வைட்டமின் ஏ மற்றும் ஈ அதிகமாக உள்ளது. 100 கிராம் இலையில் 34 மிலி கிராம் அளவுக்கு கால்சியம், 39 மிலி கிராம் மெக்னீசியம், 4மிலி கிராம் இரும்பு சத்து நிறைந்து காணப்படுகிறது. இவ்வாறு உடலுக்கு தேவையான வைட்டமின்கள், தாது உப்புகள், மினரல்கள் நிறைந்து காணப்படுவதால் பூசணிக்காய் உடலுக்கு மிகுந்த ஊக்கத்தை அளிப்பதாக உள்ளது.

பரங்கிக்காயின் சதைப்பகுதியை பயன்படுத்தி உடலுக்கு தேவையான மருந்தை தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள் பரங்கிக்காயின் தோல் மற்றும் விதைகளை நீக்கி விட்டு, சதைப்பகுதியை மட்டும் வெட்டி எடுத்து வேக வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பனங்கற்கண்டு, சீரகம், நெய். வேக வைத்த பரங்கிகாய் சதைப்பகுதியை ஒரு டீஸ்பூன் அளவு எடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் அரை ஸ்பூன் அளவுக்கு பனங்கற்கண்டு சேர்க்க வேண்டும்.

அரை ஸ்பூன் அளவு சீரகம் சேர்க்க வேண்டும். சிறிதளவு நெய் சேர்க்க வேண்டும். இதனுடன் ஒரு டம்ளர் அளவு நீர் விட்டு தேநீர் தயார் செய்து கொள்ள வேண்டும். இதை நன்றாக கொதிக்க செய்து வடிகட்டி பயன்படுத்த வேண்டும். இந்த தேநீர் வெயில் காலத்தில் உடலில் ஏற்படக் கூடிய வெப்பத்தை தணிக்கக் கூடிய ஒன்றாகும். அதே போல அதிகளவு மருந்துகளை உட்கொள்வதால் வயிற்றில் ஏற்படும் புண்களை ஆற்றக் கூடியதாகவும் பூசணி தேநீர் பயன் தருகிறது.

வெயில் கால அழற்சி என்று சொல்லப்படும் உடல் நோயை குணப்படுத்தும் தன்மை உடையதாக இந்த பூசணி பயன் தருகிறது. பொதுவாக கோடை காலத்தில் வெப்பத்தால் ஏற்படும் எரிச்சல், சிறுநீரக கோளாறு, வயிற்று கோளாறு, வயிற்று வலி ஆகியவற்றை போக்கும் மருந்தாக பூசணியின் சதைப்பகுதி வேலை செய்கிறது. உடலுக்கு

குளிர்ச்சியை தருவதாக, உடலில் இருக்கும் நுண் கிருமிகளை தடுக்கக் கூடியதாக இது விளங்குகிறது.

பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை போக்கு என்ற பிரச்னையை ஏற்படுத்தும் கிருமிகளை இது தடுக்கிறது. பூசணியை பயன்படுத்தி புண்களை ஆற்றக் கூடிய மருந்தை தயார் செய்யலாம். பரங்கிக்காயின் தோல் மற்றும் சதைப்பகுதியை வேக வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதை நன்றாக மசித்து கொள்ள வேண்டும். இந்த பசையை ஒரு அரைஸ்பூன் எடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் சிறிதளவு தேன் சேர்க்க வேண்டும். இந்த பசையை சிராய்ப்பு, காயங்கள், புண்கள் ஆகியவற்றிற்கு மேல் பூச்சு மருந்தாக பயன்படுத்தலாம். இவ்வாறு பூசணிக்காய் பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டிருப்பதால் இதை பயன்படுத்தி உடலுக்கு தேவையான ஆரோக்கியத்தை பெறலாம் - See moreat: http://www.dinakaran.com/Medical_Detail.asp?Nid=4236&cat=500#sthash.IrhO6aoo.dpuf

**ஆஸ்துமாவை குணமாக்கும் தேன்**



நாம் நினைத்திருப்போம் மலர்களிலிருந்து தேனை உறிஞ்சிக்கொண்டு வந்து தேன்கூட்டில் அடைகிறது என்று. ஆனால் உண்மை அதுவல்ல. மலர்களிலிருக்கும் குளுக்கோஸை உணவாக அருந்திய பிறகு, தேனீயின் வயிற்றிலிருந்து சுரக்கும் ஒரு வித திரவமே தேன். இது அறிவியல் பூர்வ உண்மை. சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் தேனை பருகலாம். நோய் தீர்க்கும் மருந்து தான் தேன். அந்த காலங்களில் மூலிகை மருத்துவத்தில் தேனை தான் அதிகம் பயன்படுத்தியிருக்கின்றனர். கொடுக்கப்படும் மருந்தை உடலுக்கு ஏற்றவாறு மாற்றி அமைப்பதில் தேனின் பங்கு அதிகம். இதனால்தான் தோனோடு மற்ற மருந்துகளை உண்ணக்கொடுத்து வருகின்றனர்.

**தேனில்உள்ளசத்துக்கள்**

இயற்கையாகவே சத்தும் சுவையும் உள்ள உணவு தேன். தேனில் வைட்டமின் B2,B6 H(biotin), K மற்றும் சிட்ரிக் அமிலம், டார்டாரிக் அமிலம், அக்ஸாலிக் அமிலம், குளுக்கோஸ், பாஸ்பரஸ், கந்தகம், இரும்புச்சத்து, உப்புச்சத்து, மக்னீசியம், கால்சியம், அயோடின், பொட்டாசியம், குளோரின் போன்ற அனைத்து சத்துக்களும் நிறைந்துள்ளன.

200கிராம் தேனில் 1 1/4 லிட்டர் பால் மற்றும் 1 1/2 கிலோ மாமிசம் ஆகியவற்றில் எத்தனை சத்துப்பொருள்கள் உள்ளனவோ அதற்கு இணையான சத்துப்பொருள் தேனில் உள்ளது. தேன் வெளிப்படையாக இனிப்புச் சுவை உடையதாயினும் உடலுக்கு அது கசப்பு சுவையைத் தருகிறது. கசப்புச்சுவை நரம்புகளுக்கு பலம் தருபவை. எனவே தேனை உண்டால் நரம்புகள் பலம் பெறுகின்றன.

**மருத்துவம்**

தேன் மூலம் பெரும்பாலான நோய்களை குணப்படுத்த முடியும். பித்தப்பை மற்றும் ஈரல் நோய்கள் அனைத்திற்கும் மருந்தாக உள்ளது. தினமும் வெறும் வயிற்றில் காலை அல்லது இரவு நேரத்தில் உணவு

உண்ணும் முன் சுத்தமான தேனை ஒன்று முதல் 3 தேக்காரண்டி எடுத்து கொண்டு ஆறிய சுடுநீருடன் கலந்து குடித்து வந்தால் இரைப்பை அழற்சி, ஈரல், வயிற்று புண், பித்தப்பை நோய்கள் குணமாகும். எலுமிச்சை பழம் சாறுடன் தேனை கலந்து குடித்தால் குமட்டல், வாந்தி மற்றும் தலைவலி சரியாகும்.

குடல் புண்கள், காய்ச்சல், இருமல், இருதய நோய்கள் போன்றவை குணமடைகிறது. மேலும் அஜீரணம் சீதபேதி போன்ற நோய்களுக்கு இது அருமருந்தாகும். இதில் உள்ள பொட்டாஷியம் மூட்டு வலியை போக்குகிறது.

வயதான பெரியவர்கள் அளவுடன் தேனை சாப்பிட்டு வர நீண்ட காலம் உடல்நலக் கோளாறில்லாமல் வாழ முடியும். குழந்தைகளுக்கு தேனை இரண்டு டீஸ்பூன் அளவுக்கு உணவில் கலந்து கொடுப்பதால் அவர்களுக்கு ஏற்படும் மலச்சிக்கல் வயிற்று உபாதைகளை அனைத்தும் நீங்கிவிடும்.

**தூக்கம்வரும்**

குழந்தைகளுக்கு இரவில் படுக்கப்போகும் முன் ஒரு டீஸ்பூன் அளவு தேனைக் கொடுத்தால், அதுவே தூக்கத்தை தூண்டும் மருந்தாகவும் செயல்படுகிறது. இதனால் குழந்தையின் வளர்ச்சி அதிகரிக்கும். இருதயம், நுரையீரல் இரைப்பை ஆகிய உறுப்புகளை வலுப்படுத்தும். தோடு ரத்த நாளங்களிலும், குடலிலும் சேருகின்ற அழுக்குகளை அகற்றி கழிவுகளாக வெளியேற்றும் ஆற்றல் கொண்டது.

**பழமும்தேனும்**

தேனை பழச்சாறுடன் கலந்து சாப்பிட்டால் நல்ல சக்தி கிடைக்கும். மாதுளம் பழச்சாறுடன் தேன் கலந்து சாப்பிடும் போது புது ரத்தம் உருவாகும். எலுமிச்சை சாறுடன் தேன் கலந்து சாப்பிட இருமல் குணமாகும். இஞ்சியுடன் தேன் கலந்து சாப்பிட பித்தம் தீரும். ஆரஞ்சு

பழத்துடன் தேன் கலந்து சாப்பிட நல்ல தூக்கம் வரும். ரோஜாப்பூ குல்கந்தில் தேன் கலந்து சாப்பிட உடல் சூடு தணியும். நெல்லிக்காயுடன் தேன் கலந்து சாப்பிட ரத்த சோகை நீங்கும்.

**கண்பார்வைக்கு**

கண் பார்வை பிரகாசமாக தெரிய தேனுடன் வெங்காய சாரை கலந்து சாப்பிட்டு வர வேண்டும். தேனை கேரட் சாறுடன் கலந்து காலை ஆகாரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் பருகினால் கண் பார்வை விருத்தியடையும்.

**இருமல்**

இரவில் தூங்கவிடாமல் தொடர்ந்து வரும் இருமலுக்கு மிளகு பொடியில் தேன் கலந்து சாப்பிட்டால் இருமல் வெகுவாக குறைந்து நிம்மதியாக தூக்கலாம்.

சரியளவு தேன் மற்றும் இஞ்சி சாறு கலந்து அருந்தினால் இருமல் தொண்டை வலி, மார்பு சளி, மூக்கடைப்பு போன்ற உபாதைகளில் இருந்துநிவாரணம்கிடைக்கும்.

**ஆஸ்துமா**

அரை கிராம் கருப்பு மிளகை பொடிசெய்து சரியளவு தேன் மற்றும் இஞ்சி சாறுடன் கலந்து தொடர்ந்து குடித்து வந்தால் ஆஸ்துமா குணமாகும்.

**ரத்தகொதிப்பு**

ஒரு தேக்கரண்டடி அளவு பூண்டு சாறுடன் இரண்டு தேக்கரண்டி தேன் சேர்த்து தினமும் இருவேளை சாப்பிடுவது இரத்த கொதிப்புக்கு சிறந்த மருந்தாகும்.

**கொழுப்புகுறைப்பு**

ஒரு டம்ளரில் மிதமான சூடுள்ள நீரில் ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி தேனும் ஒரு தேக்கரண்டி எலுமிச்சை சாறும் கலந்து தினமும் காலை பருகவும். இது ரத்த சுத்திகரிப்பிற்கும், உடல் கொழுப்பை குறைப்பதற்கும், மற்றும் வயிற்றை சுத்தமாக்கவும் உதவும்.

**தீப்புண்கள்**

தீக்காயம் ஏற்பட்டால் உடனடியாக தீக்காயத்தின் மீது சிறிது தேனைத் தடவவேண்டும். தேனுக்கு காயத்தை ஆற்றும் தன்மையும், கிருமிநாசினித் தன்மையும் உண்டு. இதன் காரணமாக தீப்புண் எளிதில் ஆறுவதோடு, தீக்காயத்தால் உண்டாகம் தழும்புகளும் வழக்கத்தை விட குறைவான அளவில் இருக்கும். - See more at: http://www.dinakaran.com/Medical_Detail.asp?Nid=4224&cat=500#sthash.bOATK1fU.dpuf

இன்றைய வேளாண் செய்திகள்

## 94,521 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் திருமூர்த்தி அணை இன்று திறப்பு; ஜெயலலிதா உத்தரவு



சென்னை,

முதல்-அமைச்சர் ஜெயலலிதா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி அணையில் இருந்து திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பரம்பிக்குளம் பிரதான கால்வாய், உடுமலைப்பேட்டை கால்வாய் மற்றும் உயர்மட்டக் கால்வாய் வாயிலாக

முதலாம் மண்டல பாசன பகுதிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடம் இருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள பரம்பிக்குளம் பிரதான கால்வாய், உடுமலைப்பேட்டை கால்வாய் மற்றும் உயர்மட்டக் கால்வாய் வாயிலாக இடைவெளிவிட்டு பாசனத்திற்காக 29-1-2016 முதல் (இன்று) தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள 94,521 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு ஜெயலலிதா கூறியுள்ளார்.

## திண்டுக்கல் மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்ததால் மல்லிகைப்பூ கிலோ ரூ.700–க்கு விற்பனை



திண்டுக்கல்,

திண்டுக்கல் பூ மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்ததால் மல்லிகைப்பூ கிலோ ரூ.700–க்கும், அதிக வரத்தால் செண்டுமல்லி கிலோ ரூ.10–க்கும் விற்பனை ஆனது.

<u>கிலோ ரூ.700</u>

திண்டுக்கல் பூமார்க்கெட்டுக்கு, திண்டுக்கல்லை அடுத்த வெள்ளோடு, அனுமந்தராயன்கோட்டை உள்பட பல்வேறு கிராம பகுதிகளில் இருந்து மலர்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. நாள்தோறும் வரத்தினை பொறுத்து விலை நிர்ணயம் செய்யப்படுவது வழக்கம். கடந்த 3 மாதங்களாக மல்லிகைப்பூவின் வரத்து குறைந்துள்ளது.

பொங்கல் மற்றும் முகூர்த்த நாட்களில் ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.1000–க்கு மேல் விற்பனை ஆனது. நேற்று ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.700–க்கு விற்பனை ஆனது.

இதுகுறித்து பூவியாபாரி ஒருவர் கூறியதாவது:–

<u>வரத்து குறைவு</u>

பனிக்காலத்தில் மல்லிகையின் வரத்து குறைவது வழக்கம். ஆனால் இந்த வருடம் அதிகளவில் வரத்து குறைந்து விட்டது. அதுமட்டுமின்றி விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட மல்லிகையில் பெருமளவு கேரளாவிற்கு அனுப்பப்பட்டு வருகிறது. அதனால் இங்கு தேவை அதிகரித்துள்ளது. இதுதவிர கடந்த 2 மாதங்களாக முல்லைப்பூ வரத்து நின்று விட்டது. அதனால் மல்லிகை, கனகாம்பரம், ஜாதிப்பூ, இவற்றின் விலை குறையவில்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், மார்க்கெட்டில் ஒரு கிலோ ஜாதிப்பூ ரூ.600–க்கும், கனகாம்பரம் ரூ.350, சம்பங்கி ரூ.60, கோழிக்கொண்டை, செவ்வந்தி ஆகியவை தலா ஒரு கிலோ ரூ.50–க்கும், ரோஜா ரூ.40, வாடாமல்லி ரூ.20, செண்டு மல்லி ரூ.10–க்கும் விற்பனை ஆனது.

## சிறப்பு மாட்டுச்சந்தை கூடியது ஒரு ஜோடி மாடு ரூ.1.30 லட்சத்துக்கு விற்பனை



காளிப்பட்டி தைப்பூச தேர்த்திருவிழாவில் 4 நாட்கள் சிறப்பு மாட்டுச்சந்தை கூடியது. இதில் ஒரு ஜோடி மாடு ரூ.1 லட்சத்து 30 ஆயிரத்துக்குவிற்பனைஆனது.

சிறப்புமாட்டுச்சந்தை

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள காளிப்பட்டியில் பிரசித்திபெற்ற கந்தசாமி கோவில் இருக்கிறது. இந்த கோவிலில் நடந்து வந்த தைப்பூச தேர்த்திருவிழா கடந்த 27-ந் தேதியுடன் நிறைவு பெற்றது. இந்த திருவிழாவையொட்டி சங்ககிரி மெயின் ரோட்டில் உள்ள புடவைக்காரி அம்மன் கோவில் பின்புறம் இருக்கும் மாட்டுக்கடை காட்டில் சிறப்பு மாட்டுச்சந்தைகூடியது.

கடந்த 4 நாட்களாக நடைபெற்ற இந்த மாட்டுச்சந்தையில் பசுமாடு, காளைமாடுகளைவிட சிந்து மாட்டின் இளங்கன்றுகள் விற்பனை

படுஜோராக நடந்தது. உழவுமாடுகள் குறைவாகவே சந்தைக்கு வந்தன. இருந்தபோதிலும் ஒரு ஜோடி மாடு ரூ.1 லட்சத்து 30 ஆயிரம் வரை விற்பனைஆனது.

கூடாரம்அமைத்துவிற்பனை

திருச்செங்கோடு, மோர்பாளையம், பெருந்துறை, சின்னப்பம்பட்டி, ஓமலூர், ராசிபுரம், வெண்ணந்தூர், வீரபாண்டி, மல்லசமுத்திரம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து கன்றுக்குட்டிகளுடன் கறவை மாடுகள், சினைமாடுகள் இந்த சந்தைக்கு விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. ஏராளமானவர்கள் காட்டுப்பகுதியில் கூடாரம் அமைத்து மாடுகளை நிழலில் நிறுத்தி வியாபாரம் செய்தனர்.

மாடுகளுக்கு தேவையான மூக்குக்கயிறு, கழுத்து கயிறு உள்ளிட்டவை சந்தையில் விற்பனை செய்யப்பட்டன. வடகத்திமாடு, தெற்கத்திமாடு என்று கூறப்படும் மாடுகள் சொற்ப எண்ணிக்கையிலேயே வந்திருந்தன. ஏராளமான மாடுகள் கேரளாவுக்கு கொண்டு செல்லப்பட்டதால் மாடுகள் வரத்து குறைந்து இருந்தது. மாடு விற்பனையும் குறைவாக இருந்தது. கடந்த 30 ஆண்டுகளாக காளிப்பட்டியில் தைப்பூச தேர்த்திருவிழாவையொட்டி மாட்டுச்சந்தை கூடி வருவது குறிப்பிடத்தக்கது.

## பூமி பாதுகாப்பு தினம்



நெல்லை டவுன் ரோஸ்மேரி ஐடியல் பப்ளிக் பள்ளிக்கூடத்தில் குடியரசு தின விழா பூமி பாதுகாப்பு தினமாக கொண்டாடப்பட்டது. வேளாண் விஞ்ஞானி அந்தோணிசாமி கலந்து கொண்டு பேசினார். நஞ்சில்லா உணவு என்ற தலைப்பின் கீழ் நாம் உண்ணும் உணவில் கலந்துள்ள நஞ்சுகள் பற்றியும், இயற்கை உர விவசாயத்தின் அவசியம் மற்றும் செயற்கை வேதி உரங்களின் தீங்கு பற்றியும் விரிவாக பேசினார். அரிமா சங்க தலைவர் சிக்கந்தர் தேசிய கொடியை ஏற்றினார். பள்ளி தாளாளர் ஜெயராஜ், வெரோனிக்கா ஜெயராஜ், நிர்வாக இயக்குனர் அரவிந்த் டேவிட், இயக்குனர் ஷெரின் டேவிட், ரோஸ்மேரி பள்ளிகளின் முதல்வர்கள் ஜாய் பெஞ்சமின், ஜெயந்தி, சுப்புலட்சுமி, சிந்தியா கண்ணன், சுலைகால்பர்வின், பள்ளி நிர்வாகி அமரசேகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். இயற்கை உணவு பதார்த்தங்கள், பாரம்பரிய பானங்கள் கண்காட்சி மற்றும் விற்பனை நடந்தது. பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடந்தன.